1993 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டுகள் என்று அல்ல அவர்கள் படிப்பிற்கேற்ப எம்.பி., பி.எஸ்.-ஆக இருந்தால் மூன்று ஆண்டுக் காலம் ; டிப்ளமோவாக இருந்தால் 2 ஆண்டுக் காலம்; போஸ்ட்-கிராஜுவேட்டாக இருந்தால் ஓராண்டுக் காலம் என கண்டிப்பாக ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணியாற்ற வேண்டுமென்று விதி முறை கடுமையாக இது வரை நடைபெற்றுக் கொண்டு தான் வருகிறது. ஒரு வேளை யாராவது வந்து, விடுமுறையிலே போய் விட்டால், அவர்கள் அந்தக் குறிப்பிட்ட காலத்தை முடிக்காமல் மீண்டும் டி.எம்.எஸ். சைட்—அதாவது அரசு மருத்துவ மனைகளுக்கு வர முடியாது ; ஆரம்ப சுகாதார நிலையத்திலே பணியாற்றவேண்டுமென்ற ஒரு விதி முறையை நாம் வைத்திருக்கிறோம். அதன்படி அவர்கள் பணியாற்றி விடுகிறார்கள். அதிலே நமக்கு இப்போது சிக்கல் வரவில்லை. ஆனால், அதற்குப் பின்னாலே ஒரு குறிப்பிட்ட தாலுக்கா மருத்துவ மனைக்குப் போடுகிற போது அவர்கள் அங்கே போய்ச் சேராமல் தங்களுக்கு விருப்பமான இடத்திற்குப் போக வேண்டும் என்பதால் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதையெல்லாம் தவிர்ப்பதற்குத்தான் நாம் இப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். யாரெல்லாம் விடுமுறையிலே போய்க் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அத்தனை ஏற்பாடுகளையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 3881 திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

388—

தருமபுரி மாவட்டத்திலுள்ள தெலுங்கு படித்த இளைஞர்களுக்கு போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாய்ப்பு.

*11589— திரு. கே.ஏ. மனோகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் மற்றும் தென்கனிக் கோட்டை வட்டத்தில் தெலுங்கு படித்த இளைஞர்களுக்கு போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாய்ப்பு கொடுப்பதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தில் அனைத்து பணிகளுக்கான காலி பணி இடங்கள் நிரப்பப்படும் பொழுது அவர்களது கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் பதவி சார்ந்த சான்றிதழ்கள் ஆகியவைகளே பிரதானமாக கணக்கில் கொள்ளப் படுகிறது. தமிழ் அல்லாத பிற மொழி பயின்றவர்களுக்கும் தேர்வுகள் நடத்தப்பட்டு தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக தமிழ் பயிலாத வர்களுக்கும் தமிழ் பேசவும், படிக்கவும் தெரிந்திருக்கும் பட்சத்தில் தேவையான பிற தகுதிகளும் இருக்குமாயின் அவர் களுக்கும் தேர்வில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ள பிற மொழி பயின்றவர்களுக் கும் வேலை வாய்ப்பு அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தில் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வேலை வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். கடந்த தேர்வு களிலே எத்தனை இளைஞர்கள் அந்தப் பகுதியிலேயிருந்து நேர் முகத் தேர்வுக்கு வந்தார்கள் ; அவர்களில் எத்தனைப் பேருக்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தில் கன்னடம், தெலுங்கு மொழிகள் பேசக் கூடியவர்கள் சுமார் 200 பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே.எஸ். துரைமுருகன்.

திரு. கே.எஸ். துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தமிழ் தெரியா தவர்களுக்கும் கூட, தெலுங்கு தெரிந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதே போல், இந்தியாவிலே, பிற மாநிலங் களில் குறிப்பாக, கர்நாடகத்தில், ஆந்திராவில், கேரளாவில்,

1993 ஏப்ரல் 19]

பம்பாயில், ஆக அங்கேயெல்லாம் தமிழர்கள் அதிகமாகவாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே தமிழ் படித்த இளைஞர்களுக்கு, அந்த மாநிலங்களிலே வேலை வாய்ப்பு, அரசு நிறுவனங்களிலே அளிக்கப்படுகிறதா என்பதை அரசு அறியுமா ; அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து மொழி களையும் பேசக் கூடியவர்களுக்கு, இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டைக் காக்கக்கூடிய நமது ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே தான், இது நடைமுறைப்படுத்தப்படுகிறதே தவிர மற்ற மாநிலங்களினுடைய குறிப்புகள் என்னிடத்திலே இல்லை என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

முற்பகல் 10-35

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெலுங்கு பேசுகின்றவர்களுக்கு, தமிழ்நாட்டிலே தெலுங்கு படித்தவர்களுக்கு வேலை கொடுப் பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தெலுங்கு பேசுகின்ற பகுதிக்குப் பக்கத்திலே, ஆந்திர மாநிலத் தினுடைய பக்கத்திலே நம்முடைய தமிழர்கள் இருக்கின்றார் கள். ஆகவே, அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு, ஆந்திர அரசு மூலமாகவோ, அல்லது கர்நாடக அரசு மூலமாகவோ அங்குள்ள தமிழர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுப்பதற்கு மற்ற மாநிலங்களில் இல்லாவிட்டாலும், அண்டை மாநிலத்திலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் reciprocal gesture என்ற முறையிலே அரசு அந்த அரசுகளை அணுகிக் கேட்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப் பட்டிருக்கிற கேள்வி, நம்முடைய மாநிலத்திலே அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தில் என்ன பணிகள் நடைபெறுகிறது என்றும், பிற மாநிலங்களில் இருக்கிற மொழிகள் தெரிந்தவர் கள், கன்னடம், தெலுங்கு தெரிந்தவர்களுக்கு வேலை அளிக்க படுகிறதா என்றுதான் கேட்டார்களே தவிர, நீங்கள் கேட் பதைப் போல பிற மாநிலங்களில் நாங்கள் எடுத்துச் சொல்லி, இந்த மாநிலத்தில் இருக்கிற போக்குவரத்துத் துறையோ மற்ற துறைகளோ அதை ஏற்றுக் கொள்ளுமா என்பது எனக்குத் தெரியாது.

[1993 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லுகிறபோது தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டு படித்தவர்கள், குறைந்தபட்சம் தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதில் அவர்கள் தேர்ச்சி செய்யப்பட்ட பிறகு அவர்களுக்கு அந்த வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். ஆனால், தூர்தர்ஷன் போன்ற, தொலைக்காட்சி நிலையங்களில் பணியாற்றுகின்றபோது பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று பணியாற்றக் கூடியவர்கள் அங்கே அந்தந்த மாநில மொழியைத் தெரிந்துகொள்ளவேண்டும், கற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கின்றபோது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. சுவாமிநாதன், கேள்விக்குச் சீக்கிரம் வாருங்கள்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இந்தியை அறவே படிக்கக் கூடாது என்ற சூழ்நிலைமை இருக்கிறது. நாம் தூர்தர்ஷன் போன்ற நிலையங்களில் இந்தி படிக்கக் கூடாது என்று சொல்வது எந்தவிதத்திலேயும் நியாயமாக இருக்காது.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூல வினாவுக்குத் தொடர்பு இல்லாத துணை வினா.

வினா எண் 389, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

389—

சாலையோரப் பூங்காக்களை போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பராமரித்தல்.

*14237—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சாலையோரப் பூங்காக்களை நல்ல முறையில் பராமரிக்க போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS